ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1816/30 - 2013 ජූනි මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.06.27

*1816/30 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்

*1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1981 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1996 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 155 ஆம் 156 ஆம் பிரிவுகளின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, அச்சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜனக பண்டார தென்னக்கோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2012, நவெம்பர் 14.

ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் 2012 காணி அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் என அழைக்கப்படலாம்.

2. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 162(1) ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அளிப்புப் பத்திரமொன்றினூடாக வழங்கப்பட்ட காணியொன்று பொறுப்பு நீக்கம் செய்யப்படுகின்ற ஆவணங்கள், இக் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணான விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் காணி ஆணையாளரினால்/காணி ஆணையாளர் நாயகத்தினால் அவ் ஆவணங்கள் செயலிழக்கச் செய்யப்படுகின்ற பிரகடனம் கீழ்க் காணும் இணைப்பு ‘அ’ வில் உள்ளவாறாக இருத்தல் வேண்டும்.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*இணைப்பு 'அ'*

காணிப் பதிவாளர்,
...............................

முன்பதிவு ..........................

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் 162 (2) ஆம் பிரிவுகளின் கீழ்
பிரகடனப்படுத்தப்பட்ட ஆவணம்**

காணி ஆணையாளர்/காணி ஆணையாளர் நாயகம் ............................................................................ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், இங்கு அட்டவணை I இல் காட்டப்பட்ட, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவில் காட்டப்பட்ட நிபந்தனைக்ளுக்குக் கட்டுப்பட்டு 19(4) ஆம் பிரிவின் கீழ் கொடைப் பத்திரமொன்றினூடாக வழங்கப்பட்ட காணியிலிருந்து கீழ்க்காணும் அட்டவணை II இல் காட்டப்பட்ட காணிக்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணம் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 162(1) ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகள் மீறப்படும் விதத்தில் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணமென்பதற்கு நான் திருப்தி அடைந்ததால், மேற்சொன்ன சட்டத்தின் 42 ஆம் 162(1) ஆம் பிரிவுகளின் கீழ் அதே அட்டவணை II இற்காக எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணம் செயலிழந்ததாக பிரகடனம் செய்து இவ் ஆவணத்தை எழுதி அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*அட்டவணை I*

*அட்டவணை II*

திகதி: ...................

.................................................,
காணி ஆணையாளர்/காணி ஆணையாளர் நாயகம்

07-329

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.